(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 144.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2017 பெப்ரவரி 07, செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

464/ ' 16

1.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— ( 5 )

(அ) (i) 2016 சனவரி 01 திகதியில் உள்ளவாறு சனாதிபதியினால் அவரது பணியாட் தொகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள சகல ஆலோசகர்கள், செயலாளர்கள், ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள், பிரத்தியேக உதவியாளர்கள் மற்றும் வேறு இவ்வாறான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி (i) இற்கு அமைவாக மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் வழங்கப்படும் சம்பளம், கொடுப்பனவுகள், பணியாட்டொகுதி மற்றும் ஏனைய வசதிகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

535/ ' 16

2.

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டளவில் இலங்கையில் சோயா அவரை பயிர்செய்யப்பட்ட நிலப்பரப்பு எவ்வளவு;

(ii) 2010 தொடக்கம் 2015 வரையான ஐந்து வருட காலப்பகுதியில் சோயா அவரை உற்பத்தி ஆண்டுவாரியாக வெவ்வேறாக எத்தனை கிலோகிறாம்;

(iii) அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து நேரடியாக சோயா அவரையை கொள்வனவு செய்கின்றதா;

(iv) ஆமெனில், கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட சோயா அவரையின் அளவு ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) சோயா அவரை உற்பத்தியை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

634/ '16

3.

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்யாத ஆட்கள் முறைசார்ந்த ஆட்சேர்ப்பு நடைமுறையின்றி வன்னி மாவட்டத்தின் சமுர்த்தி உத்தியோகத்தர்களாக ஆட்சேர்க்கப்பட்டுள்ளனரென்பதை அறிவாரா;

(ii) அவ்விதமாக தகைமைகளின்றி ஆட்சேர்க்கப்பட்டுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களின் தகவல்கள் யாவை;

(iii) முறைசாரா விதத்தில் நியமிக்கப்பட்டுள்ள ஆட்களை சேவையிலிருந்து அகற்றி முறைசார்ந்த விதத்தில் புதிதாக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு துரித நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

675/ '16

4.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், புத்தளம், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் தற்போது இனங்காணப்பட்டுள்ள தொல்பொருளியல் பெறுமதிமிக்க இடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு ஏற்ப தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் தற்போது தொல்பொருளியல் திணைக்களத்தினால் பாதுகாக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை யாது; அவ்விடங்கள் யாவை என்பதையும்;

(iv) பாதுகாக்கும் நடவடிக்கைகள் இதுவரை ஆரம்பிக்கப்படாத கடும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ள தொல்பொருளியல் பெறுமதிமிக்க இடங்கள் யாவை என்பதையும்;

(v) மேலே (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்க நிறுவனங்களினால் தயார் செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் யாவை என்பதையும்;

(vi) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

864/ ’16

5.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் செயற்பாட்டுப் பணிப்பாளர் ஒருவராக திரு. சந்தன பெல்பிட்ட சேவையாற்றுகின்றாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இவரது சம்பளம், கொடுப்பனவுகள், வழங்கப்பட்டுள்ள வாகனங் களுக்கான மாதாந்த வாடகை ஆகியன தனித்தனியே யாது என்பதையும்;

(iii) சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் 2015 நவம்பர் 06 ஆம் திகதியிடப்பட்ட PCI/52/2015 ஆம் இலக்க மனுவின் கீழ் கமத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திரு. சந்தன பெல்பிட்ட இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளராக சேவையாற்றிய காலத்தில் மேற்கொண்டுள்ள பாரிய நிதி மோசடிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி நிதி மோசடிகள் தொடர்பிலான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் சிபாரிசுகள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி சிபாரிசுகள் அமுல்படுத்தப்பட்ட திகதி யாது என்பதையும்;

(vii) சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் சிபாரிசுகள் அமுல்படுத்தப்படவில்லை எனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

873/ ’16

6.

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஊவா மாகாண சபையின் தற்போதைய முதலமைச்சரினால் ஊவா மாகாண பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை புத்தகப் பைகள் வழங்கும் வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், பதுளை மாவட்டத்தில் இதுவரை மேற்படி அனுகூலங்கள் கிடைக்கப்பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இதற்கென இன்றளவில் ஏற்கப்பட்டுள்ள மொத்தச் செலவு எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத்தொகை பெறப்பட்ட மூலங்கள் யாவை என்பதையும்;

(v) இதில் ஏதேனும் முறைகேடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

899/ ’16

7.

கௌரவ சமல் ராஜபக்ஷ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வீரவில மற்றும் யோதகண்டிய கமநல சேவை நிலையங்களின் ஆளுகைப் பிரதேசங்களிலிருந்து உர மானியத்திற்கு விண்ணப்பித்துள்ள விவசாயிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) இவ்விவசாயிகளில் உர மானிய நிதித்தொகை வழங்கப்பட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) உர மானிய நிதித்தொகை வழங்கப்படவுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) உர மானிய நிதித்தொகை கிடைக்காத விவசாயிகளுக்கு நிதி வழங்குவதற்கு உத்தேசமாயுள்ள திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

910/’16

8.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு, மீள்குடியேற்ற, இந்து மத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2 )

(அ) (i) யுத்தத்தினால் இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள வவுனியா பூந்தோட்டம் முகாம் திறந்து வைக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) அந்த முகாம் தொடர்ந்தும் பேணிவரப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், தற்போது அந்த முகாமில் வசிப்பவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) அங்கு மலசலகூடங்கள், நீர் மற்றும் மின்சார வசதிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) அந்த அகதிகளை வேறு இடமொன்றில் நிரந்தரமாக குடியேற்றுவதற்கான திட்டமொன்று முன்வைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அது யாது என்பதையும்;

(vii) பல வருடங்களாக வவுனியாவில் இயல்பு வாழ்கைக்கு பழகிப்போயுள்ள அந்த மக்கள், சிங்கள - தமிழ் நல்லிணக்கத்தை பாதுகாத்து அந்தப் பிரதேசத்தில் வாழ்வதனால் அவர்களுக்கு அதே இடத்தில் வீடமைப்புத் தொகுதியொன்றை அமைத்து குடியமர்த்த முடியாமைக்கான காரணம் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

938/ ’16

9.

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இந்திய – இலங்கை சமுத்திர மின் கம்பிக் கருத்திட்டத்தின் மூலம் நிறைவேற்றிக் கொள்ள உத்தேசித்துள்ள நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை 2020 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கான ஆற்றல் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கருத்திட்டத்திற்கு,

(i) மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த நிதித் தொகை யாது என்பதையும்;

(ii) இலங்கை அரசாங்கத்தினால் ஏற்கப்படும் செலவு யாது என்பதையும்;

(iii) இந்திய அரசாங்கத்தினால் நிதி முதலீடு செய்யப்படுமாயின், அத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

951/ '16

10.

கௌரவ இந்திக்க அநுருத்த ஹேரத்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திவுலபிட்டிய தொகுதியில் உள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான காணிகளின் பரப்பளவு எவ்வளவு;

(ii) மேற்படி ஒவ்வொரு காணியும் சொந்தமாயுள்ள நிறுவனம் வெவ்வேறாக யாது;

(iii) முதலீட்டு நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் பரப்பளவு எவ்வளவு;

(iv) குடியிருப்பதற்காக குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள அல்லது கையளிக்கப்பட்டுள்ள காணிகளின் பரப்பளவு எவ்வளவு;

(v) எதிர்காலத்தில் குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது கையளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள காணிகளின் பரப்பளவு எவ்வளவு;

(vi) குறை உபயோக காணிகளிருப்பின், அவற்றை முழுமையாக உபயோகிப்பதற்கான வேலைத்திட்டமொன்று அமைச்சுக்கு உள்ளதா;

(vii) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1039/ '16

11.

கௌரவ கனக்க ஹேரத்,— சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் வாழ்க்கை உதவிப்படிக் கொடுப்பனவு வழங்கப்பட்ட வலதுகுறைந்த ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டில் வலதுகுறைந்த ஆட்களுக்கு வாழ்க்கை உதவிப்படிக் கொடுப்பனவாக வழங்கப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதியளவில் புதிதாக விண்ணப்பித்திருந்த வலதுகுறைந்த ஆட்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இக் கொடுப்பனவுகள் கிடைக்கப் பெறாத வலதுகுறைந்த ஆட்கள் உள்ளனரென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், கேகாலை மாவட்டத்தில் உள்ள அவ்வாறான வலதுகுறைந்த ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேலே (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஆட்களுக்கு இந்த ஆண்டில் கொடுப்பனவுகள் வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1063/ '16

12.

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015.01.08 ஆம் திகதியன்று உள்ளவாறு சமுர்த்தி பெறுனர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட ரீதியாக தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சமுர்த்தி ஆய்வறிக்கைக்கு அமைய ஒட்டுமொத்த சமுர்த்தி பெறுனர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி அறிக்கைக்கு அமைய ஒவ்வொரு மாவட்டத்தினதும் சமுர்த்தி பெறுனர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேற்படி அறிக்கைக்கு அமைய சமுர்த்தி உதவி வழங்குதல் நிறுத்தப்படும் குடும்பங்கள் உள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், சமுர்த்தி உதவி வழங்குதல் நிறுத்தப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட ரீதியாக தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1100/ ' 16

13.

கௌரவ அசோக்க பிரியந்த,— சுகாராரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களிலுள்ள தெலசீமியா நோயாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி நோயாளர்கள் வசித்து வருகின்ற பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை என்பதையும்;

(iii) தெலசீமியா நோய்க்கு ஆளானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான சத்திரசிகிச்சைக்கூடமொன்றும் மரபணு வங்கியொன்றும் வடமேல் மாகாணத்தில் தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி நோயாளர்களுக்கான சிகிச்சை மற்றும் ஏனைய வசதிகளைப் பெற்றுக் கொடுக்க அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1218/ '16

14\.

கௌரவ டளஸ் அழகப்பெரும,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டு தேர்தல்கள் நடத்தப்படாது கடந்துள்ள காலம் 1½ ஆண்டுகளைத் தாண்டியுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா என்பதையும்;

(ii) புதிய உள்ளூராட்சி சபை தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம், கடந்த அரசாங்கத்தினால் எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்ட திகதி; ஆணைக்குழுவின் காலம் முடிவடைந்த திகதி மற்றும் மேற்படி ஆணைக்குழுவின் விதப்புரைகள் ஆராயப்பட்டதன் பின்னர் புதிய எல்லை நிர்ணயத்துடன் கூடிய தொகுதிகள் வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்ட திகதி தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போதைய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட எல்லை நிர்ணய சபை நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அவர்களுக்கு கிடைத்திருந்த திருத்தங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) குறித்த திருத்தங்களை சமர்ப்பித்த திகதிகள், ஆட்கள் மற்றும் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iv) சரியாக நிர்ணயிக்கப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அற்ற உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மேலே (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி உள்ளூராட்சி ஆளுகைப் பிரதேசங்களுக்கான தேர்தல்களை நடத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

537/ ' 16

15\.

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டளவில் இலங்கையில் உளுந்து பயிர்செய்யப்பட்ட நிலப்பரப்பு எவ்வளவு;

(ii) 2010 தொடக்கம் 2015 வரையான ஐந்து வருட காலப்பகுதியில் உளுந்து உற்பத்தி ஆண்டுவாரியாக வெவ்வேறாக எத்தனை கிலோகிறாம்;

(iii) அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து நேரடியாக உளுந்தைக் கொள்வனவு செய்கின்றதா;

(iv) ஆமெனில், கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட உளுந்தளவு ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உளுந்து உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 164 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் (சைகைகள், சமிக்ஞைகள், அடையாளங்கள் மற்றும் வீதிக் குறியீடுகள்) தொடர்பாக போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 நவம்பர் 12 ஆம் திகதிய 1940/21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2017.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதி தீர்வைகள் தொடர்பிலான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2016 நவம்பர் 10 ஆம் திகதிய 1992/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 நவம்பர் 10 ஆம் திகதிய 1992/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 (2) ஆம் பிரிவின் கீழ் மீள் ஏற்றுமதிக்காக அல்லது தீர்வையற்ற கடைகளில் வெளிநாட்டு அலகில் விற்பனை செய்வதற்காக இறக்குமதி செய்யப்படுகின்ற வெளிநாட்டு மதுபானம் மீது மதுவரியினை விலக்களிப்பது தொடர்பில் 2016 ஒற்றோபர் 04 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2016 ஒற்றோபர் 03 ஆம் திகதிய 1987/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இல. 990)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

வாழ்வின் எழுச்சி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 142 ஆவது பிரிவின் கீழ் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரினால் விலைகளின் மீதான உச்சவரம்பு தொடர்பாக ஆக்கப்பட்டு, 2016 ஒற்றோபர் 21 ஆம் திகதிய 1989/61 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 8.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 ஒக்தோபர் 5 ஆம் திகதிய 1987/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— குற்றவியல் கருமங்களின் போது பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் கட்டளை,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் மற்றும் யுக்ரேன் அரசாங்கத்திற்குமிடையே குற்றவியல் கருமங்களின் போது பரஸ்பர சட்ட உதவியளித்தல் பற்றி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை தொடர்பாக 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் கருமங்களின் போது பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2016 நவம்பர் 11 ஆம் திகதிய 1992/78 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2017.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரும் காணி அமைச்சரும்,— காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (460 ஆம் அத்தியாயமான) காணி எடுத்தற் சட்டத்தின் 63 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஊ) பந்தியின் கீழ் 2013 ஆம் காணி எடுத்தற் (நட்டஈடு செலுத்துதல்) ஒழுங்குவிதிகளின் 4(2) ஆம் ஒழுங்குவிதியைத் திருத்தி காணி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 நவம்பர் 18 ஆம் திகதிய 1993/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்,— கம்பனிகள் சட்டம் மற்றும் சங்கங்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 477 ஆம் பிரிவுடன் வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 527 ஆம் பிரிவின் கீழ் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க சங்கங்கள் கட்டளை (திருத்தச்) சட்டத்துடன் வாசிக்கப்படும் (123 ஆம் அத்தியாயம்) 1891 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ், கம்பனிகள் (கட்டணம்) மற்றும் சங்கங்கள் (கட்டணம்) தொடர்பாக கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 ஒற்றோபர் 25 ஆம் திகதிய 1990/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2016 நவெம்பர் 11 ஆம் திகதிய 1992/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.01.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் கீழ் உத்தேசிக்கப்பட்ட கருத்திட்டம் சம்பந்தமாக அளிக்கப்படவுள்ள விலக்களிப்புக்கள் தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 நவெம்பர் 18 ஆம் திகதிய 1993/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.01.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— ஏற்றுமதி இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆவது பிரிவின் (3) ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆவது பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 திசெம்பர் 30 ஆம் திகதிய 1999/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.01.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய விசாரணை ஆணைக்குழு இலஞ்சம் தொடர்பான திடீர் சோதனைகள் முற்பணக் கணக்கின் வரையறைகளில் திருத்தம் மேற்கொள்ளல் - 2016 (விடய இலக்கம் - 01002),— பத்தொன்பதாவது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் ஊடாக திருத்தப்பட்டவாறான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41 (ஆ) உறுப்புரையின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் விசாரணை ஆணைக்குழுவின் இலஞ்சம் தொடர்பான திடீர் சோதனைகள் முற்பணக் கணக்கின் வரையறைகளைத் திருத்தியமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாதலாலும்;

அதற்கிணங்க, இலஞ்சம் தொடர்பான திடீர் சோதனைகளின் பொழுது இலஞ்சமாகப் பயன்படுத்துவதற்கு முற்பணங்களாகச் செலுத்துவதற்காக மதிப்பீட்டில் தற்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாதலாலும்:—

| | |
|---|---|
| உச்ச செலவு வரையறை | - ரூ. 150,000,000.00 |
| குறைந்த வரவு வரையறை | - ரூ. 5,000,000.00 |
| உச்ச பற்று மீதி வரையறை | - ரூ. 275,000,000.00 |

2016 ஆம் ஆண்டிற்காக இந்த திடீர் சோதனைக் கணக்கின் எதிர்பார்க்கப்படும் மீதி கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| 2016.01.01 திகதியன்று பற்று மீதி | - ரூ. 19,340,031.98 |
| ஆண்டிற்காக எதிர்பார்க்கப்படும் பற்று | - ரூ. 150,000,000.00 |
| ஆண்டிற்காக எதிர்பார்க்கப்படும் வரவு | - ரூ. 1,700,000.00 |
| 2016.12.31 திகதியன்று எதிர்பார்க்கப்படும் பற்று மீதி | - ரூ. 167,640,031.98; மற்றும் |

முன்னைய வருடங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் முடிவடையாததன் காரணமாக வழக்கிற்குரிய பொருட்களாக தடுத்துவைக்கப்பட்டுள்ள பணத்தை வரவு வைக்க முடியாதுபோனமை காரணமாக வரவில் குறைவு ஏற்பட்டுள்ளதாதலாலும்;

அதற்கிணங்க, இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் விசாரணை ஆணைக்குழுவின் திடீர் சோதனைகள் முற்பணக் கணக்கின் குறைந்த வரவு வரையறையை ரூபா 5,000,000.00 இலிருந்து ரூபா 1,500,000.00 வரை குறைப்பதற்கு இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

இலங்கைப் பொறியியற் பேரவை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 108 (1) உறுப்புரையின் கீழ் பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கான சம்பளத்தில் திருத்தம் மேற்கொள்ளல் தொடர்பான பிரேரணை, — பத்தொன்பதாவது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் ஊடாக திருத்தப்பட்டவாறான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கான மாதாந்த சம்பளம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

அதற்கிணங்க, பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கான சம்பளங்களை 2016.01.01 ஆம் திகதி முதல் 2020.01.01 ஆம் திகதி வரை 05 கட்டங்களில் நடைமுறைப்படுத்தும் வகையில் திருத்தம் மேற்கொள்வதற்கான பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(அட்டவணை I)

| சேவைப்பிரிவு | சம்பளக் குறியீடு | சம்பள அளவுத் திட்டம் (ரூ) |
|---|---|---|
| பிரதம நீதியரசர் | JS 5 – 2016 | 145,000 -5 X 7,250-181,250 |
| உயர் நீதிமன்ற நீதிபதிகள்/ மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் | JS 4 - 2016 | 135,000-5 X 6,750-168,750 |
| மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகள் | JS 3 – 2016 | 131,500-5 X 6,575-164,375 |

புதிய சம்பள அளவுத் திட்டங்களை ஒவ்வொரு கட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கான சம்பள மாற்றம் பற்றிய அட்டவணையை அட்டவணை II ஆகவும் சம்பள அளவுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அறிவுரையை அட்டவணை III ஆகவும் இத்துடன் சமர்ப்பிக்கப்படுவதுடன், பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்காக இந்தப் பிரேரணையின் மூலம் தீர்மானிக்கப்படும் சம்பள முறைமையை நடைமுறைப்படுத்த வேண்டுமென இலங்கை சனநாயக சோசலிக் குடியரசின் அரசியலமைப்பின் 108 (1) உறுப்புரையின் பிரகாரம் இப் பாராளுமன்றம் இத்தால் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

**அட்டவணை I**

**அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளுக்கான சம்பளத் திட்டம் – 2016**

| | சேவைப் பிரிவு | சம்பளக் குறியீடு | ஆரம்பப் படிநிலை | வருடங்கள் | சம்பள ஏற்றம் | உச்சளவு |
|---|---|---|---|---|---|---|
| 1 | மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகள் | JS 3 - 2016 | 131,500 | 5 | 6,575 | 164,375 |
| 2 | உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் | JS 4 - 2016 | 135,000 | 5 | 6,750 | 168,750 |
| 3 | பிரதம நீதியரசர் | JS 5 - 2016 | 145,000 | 5 | 7,250 | 181,250 |

ஒப்பம்
தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு

**சம்பள அளவுத் திட்டங்கள்**

சம்பள அளவுத் திட்டங்களின் ஒவ்வொரு நிரல்களின் ஊடாக காட்டப்படும் தகவல்கள் பின்வருமாறு,

நிரல் 1 - ஆண்டுகளின் எண்ணிக்கை

நிரல் 2 - சேவைக் காலம்

நிரல் 3 - தரம்

நிரல் 4 - நியமனத்தின்போது மற்றும் பதவி உயர்வு பெற்றிருப்பின் சம்பளப் படி நிலை

| சேவை வகை | | | மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் / மன்றாடி அதிபதி | பிரதம நீதி அரசர் |
|---|---|---|---|---|---|
| சம்பளக் குறியீட்டு இலக்கம் | | | JS 3-2016 | JS 4-2016 | JS 5-2016 |
| 1 | 2 | 3 | 4 | 4 | 4 |
| | | | 6,575 | 6,750 | 7,250 |
| | | | 5 | 5 | 5 |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| 1 | | | 131,500 | 135,000 | 145,000 |
| 2 | | | 138,075 | 141,750 | 152,250 |
| 3 | | | 144,650 | 148,500 | 159,500 |
| 4 | | | 151,225 | 155,250 | 166,750 |
| 5 | | | 157,800 | 162,000 | 174,000 |
| 6 | | | 164,375 | 168,750 | 181,250 |

ஒப்பம்

தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு

# சம்பள மாற்ற நிரல்

JS 3—2016

அட்டவணை II

| சம்பளப் படிநிலை | 2015.12.31 ஆம் திகதிக்கு | | 2016.01.01 ஆம் திகதிக்கு | | 2017.01.01 ஆம் திகதிக்கு | | 2018.01.01 ஆம் திகதிக்கு | | 2019.01.01 ஆம் திகதிக்கு | | 2020.01.01 ஆம் திகதிக்கு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அடிப்படை சம்பளம் (ரூ) | மொத்தச் சம்பளம் (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) |
| 1 | 63,500 | 85,525 | 77,100 | 8,425 | 90,700 | - | 104,300 | - | 117,900 | - | 131,500 | - |
| 2 | 66,675 | 89,176 | 80,955 | 8,221 | 95,235 | - | 109,515 | - | 123,795 | - | 138,075 | - |
| 3 | 69,850 | 92,828 | 84,810 | 8,018 | 99,770 | - | 114,730 | - | 129,690 | - | 144,650 | - |
| 4 | 73,025 | 96,479 | 88,665 | 7,814 | 104,305 | - | 119,945 | - | 135,585 | - | 151,225 | - |
| 5 | 76,200 | 100,130 | 92,520 | 7,610 | 108,840 | - | 125,160 | - | 141,480 | - | 157,800 | - |
| 6 | 79,375 | 103,781 | 96,375 | 7,406 | 113,375 | - | 130,375 | - | 147,375 | - | 164,375 | - |

ஒப்பம்
தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு

| சம்பளப் படிநிலை | 2015.12.31 ஆம் திகதிக்கு | | 2016.01.01 ஆம் திகதிக்கு | | 2017.01.01 ஆம் திகதிக்கு | | 2018.01.01 ஆம் திகதிக்கு | | 2019.01.01 ஆம் திகதிக்கு | | 2020.01.01 ஆம் திகதிக்கு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அடிப்படை சம்பளம் (ரூ) | மொத்தச் சம்பளம் (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) |
| 1 | 65,000 | 87,250 | 79,000 | 8,250 | 93,000 | - | 107,000 | - | 121,000 | - | 135,000 | - |
| 2 | 68,250 | 90,988 | 82,950 | 8,038 | 97,650 | - | 112,350 | - | 127,050 | - | 141,750 | - |
| 3 | 71,500 | 94,725 | 86,900 | 7,825 | 102,300 | - | 117,700 | - | 133,100 | - | 148,500 | - |
| 4 | 74,750 | 98,463 | 90,850 | 7,613 | 106,950 | - | 123,050 | - | 139,150 | - | 155,250 | - |
| 5 | 78,000 | 102,200 | 94,800 | 7,400 | 111,600 | - | 128,400 | - | 145,200 | - | 162,000 | - |
| 6 | 81,250 | 105,938 | 98,750 | 7,188 | 116,250 | - | 133,750 | - | 151,250 | - | 168,750 | - |

ஒப்பம்
தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு

| சம்பளப் படிநிலை | 2015.12.31 ஆம் திகதிக்கு | | 2016.01.01 ஆம் திகதிக்கு | | 2017.01.01 ஆம் திகதிக்கு | | 2018.01.01 ஆம் திகதிக்கு | | 2019.01.01 ஆம் திகதிக்கு | | 2020.01.01 ஆம் திகதிக்கு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அடிப்படைச் சம்பளம் (ரூ) | மொத்தச் சம்பளம் (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) |
| 1 | 70,000 | 93,000 | 85,000 | 8,000 | 100,000 | - | 115,000 | - | 130,000 | - | 145,000 | - |
| 2 | 73,500 | 97,025 | 89,250 | 7,775 | 105,000 | - | 120,750 | - | 136,500 | - | 152,250 | - |
| 3 | 77,000 | 101,050 | 93,500 | 7,550 | 110,000 | - | 126,500 | - | 143,000 | - | 159,500 | - |
| 4 | 80,500 | 105,075 | 97,750 | 7,325 | 115,000 | - | 132,250 | - | 149,500 | - | 166,750 | - |
| 5 | 84,000 | 109,100 | 102,000 | 7,100 | 120,000 | - | 138,000 | - | 156,000 | - | 174,000 | - |
| 6 | 87,500 | 113,125 | 106,250 | 6,875 | 125,000 | - | 143,750 | - | 162,500 | - | 181,250 | - |

ஒப்பம்
தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு

இணைப்பு I

சம்பள மீளமைப்பு – மாதிரிக் கடிதம்

எனது இல :
திகதி :

பெயர் :
பதவி:

**முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை ………… இணங்க 2016.01.01 ஆம் திகதிக்கான சம்பள மீளமைப்பு**

மேற்போந்த சுற்றறிக்கைப்படி தங்களின் சம்பளம் 2016.01.01 ஆம் திகதிக்கு பின்வருமாறு மீளமைக்கப்படுகின்றது.

1. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06/2006 ஆம் இலக்க வகுதிப்படுத்தலுக்கு அமைய 2015.12.31 ஆம் திகதிக்கு ஏற்புடையதான
   (அ) சேவைத் தொகுதி :
   (ஆ) சம்பள குறியீடு :
   (இ) சம்பள அளவுத்திட்டம் :
   (ஈ) சம்பள படிநிலை :
   (உ) சம்பள நிலை : ரூபா
   (ஊ) இறுதி சம்பள உயர்வுத் திகதி :

2. முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை …….. வகுதிப்படுத்தலுக்கு அமைய 2016.01.01 ஆம் திகதிக்கு அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு
   (அ) சேவைத் தொகுதி :
   (ஆ) சம்பள குறியீடு :
   (இ) சம்பள அளவுத்திட்டம் :
   (ஈ) சம்பள படிநிலை :
   (உ) சம்பள நிலை : ரூபா.

3. அட்டவணை II இற்கு ஏற்ப 2016.01.01 ஆம் திகதிக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளம்
   (அ) அடிப்படைச் சம்பளம் : ரூபா.
   (ஆ) மொத்தச் சம்பளத்தினை சீராக்கல் படிகள்: ரூபா.

4. தவறான ஒரு வகுப்பீட்டின் கீழ் அல்லது கணிப்பீட்டுக் கோளாறின் கீழ் அல்லது வேறு ஏதாவது தவறின் காரணமாக அல்லது கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதெனத் தெரியவருமாயின், அத்தொகைகள் மீள அறவீடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

| தயாரித்தது : | | பரிசீலித்தது : | |
|---|---|---|---|
| கையொப்பம் | :........................ | கையொப்பம் | :........................ |
| பெயர் | :........................ | பெயர் | :........................ |
| பதவி | :........................ | பதவி | :........................ |
| திகதி | :........................ | திகதி | :........................ |

அங்கீகரித்தது :
கையொப்பம் :................................................
பெயர் :................................................
பதவி :................................................
திகதி :................................................
உத்தியோகபூர்வ முத்திரை :…………...............…..

பிரதிகள் :- 1……………………………………………
2……………………………………………

இணைப்பு II

சம்பள மீளமைப்பு – மாதிரிக் கடிதம்

எனது இல :
திகதி :

பெயர் :
பதவி:

**முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை ………… இணங்க 2017.01.01 ஆம் திகதிக்கான சம்பள மீளமைப்பு**

மேற்போந்த சுற்றறிக்கைப்படி தங்களின் சம்பளம் 2017.01.01 ஆம் திகதிக்கு பின்வருமாறு மீளமைக்கப்படுகின்றது.

1. முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை …….. வகுதிப்படுத்தலுக்கு அமைய 2016.12.31 ஆம் திகதிக்கு,
   - (அ) சேவைத் தொகுதி :
   - (ஆ) சம்பள குறியீடு :
   - (இ) சம்பள அளவுத்திட்டம் : ரூபா.
   - (ஈ) அட்டவணை I இற்கு இணங்க சம்பள நிலை : ரூபா
   - (உ) அட்டவணை II இற்கு இணங்க சம்பள நிலை : ரூபா
   - (ஊ) அட்டவணை II இற்கு ஏற்ப சம்பள படிமுறை :
   - (எ) இறுதிச் சம்பள உயர்வுத் திகதி :

2. அட்டவணை II இற்கு ஏற்ப 2017.01.01 ஆம் திகதிக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளம் ரூபா,

3. தவறான ஒரு வகுப்பீட்டின் கீழ் அல்லது கணிப்பீட்டுக் கோளாறின் கீழ் அல்லது வேறு ஏதாவது தவறின் காரணமாக அல்லது கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதெனத் தெரியவருமாயின், அத்தொகைகள் மீள அறவீடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

| தயாரித்தது : | | பரிசீலித்தது : | |
|---|---|---|---|
| கையொப்பம் | :…………………… | கையொப்பம் | :…………………… |
| பெயர் | :…………………… | பெயர் | :…………………… |
| பதவி | :…………………… | பதவி | :…………………… |
| திகதி | :…………………… | திகதி | :…………………… |

அங்கீகரித்தது :

கையொப்பம் :……………………………………
பெயர் :……………………………………
பதவி :……………………………………
திகதி :……………………………………
உத்தியோகபூர்வ முத்திரை :……………………………

பிரதிகள் :- 1……………………………………………
2……………………………………………

இணைப்பு III

சம்பள மீளமைப்பு – மாதிரிக் கடிதம்

எனது இல :
திகதி :

பெயர் :
பதவி:

**முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை ………… இணங்க 2018.01.01 ஆம் திகதிக்கான சம்பள மீளமைப்பு**

மேற்போந்த சுற்றறிக்கைப்படி தங்களின் சம்பளம் 2018.01.01 ஆம் திகதிக்கு பின்வருமாறு மீளமைக்கப்படுகின்றது.

1. முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கை …….. வகுதிப்படுத்தலுக்கு அமைய 2017.12.31 ஆம் திகதிக்கு,
   - (அ) சேவைத் தொகுதி :
   - (ஆ) சம்பள குறியீடு :
   - (இ) சம்பள அளவுத்திட்டம் : ரூபா.
   - (ஈ) அட்டவணை I இற்கு இணங்க சம்பள நிலை : ரூபா
   - (உ) அட்டவணை II இற்கு இணங்க சம்பள நிலை : ரூபா
   - (ஊ) அட்டவணை II இற்கு ஏற்ப சம்பள படிமுறை :
   - (எ) இறுதிச் சம்பள உயர்வுத் திகதி :

2. அட்டவணை II இற்கு ஏற்ப 2018.01.01 ஆம் திகதிக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளம்: ரூபா,

3. தவறான ஒரு வகுப்பீட்டின் கீழ் அல்லது கணிப்பீட்டுக் கோளாறின் கீழ் அல்லது வேறு ஏதாவது தவறின் காரணமாக அல்லது கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதெனத் தெரியவருமாயின், அத்தொகைகள் மீள அறவீடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

| தயாரித்தது : | | பரிசீலித்தது : | |
|---|---|---|---|
| கையொப்பம் | :........................ | கையொப்பம் | :........................ |
| பெயர் | :........................ | பெயர் | :........................ |
| பதவி | :........................ | பதவி | :........................ |
| திகதி | :........................ | திகதி | :........................ |

அங்கீகரித்தது :

கையொப்பம் :..................................................
பெயர் :..................................................
பதவி :..................................................
திகதி :..................................................
உத்தியோகபூர்வ முத்திரை :……………...................…..

பிரதிகள் :- 1……………………………………………
2……………………………………………

இணைப்பு IV

சம்பள மீளமைப்பு – மாதிரிக் கடிதம்

எனது இல :
திகதி :

பெயர் :
பதவி:

**முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை ………… இணங்க 2019.01.01 ஆம் திகதிக்கான சம்பள மீளமைப்பு**

மேற்போந்த சுற்றறிக்கைப்படி தங்களின் சம்பளம் 2019.01.01 ஆம் திகதிக்கு பின்வருமாறு மீளமைக்கப்படுகின்றது.

1. முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை …….. வகுதிப்படுத்தலுக்கு அமைய 2018.12.31 ஆம் திகதிக்கு,
   - (அ) சேவைத் தொகுதி :
   - (ஆ) சம்பள குறியீடு :
   - (இ) சம்பள அளவுத்திட்டம் : ரூபா.
   - (ஈ) அட்டவணை I இற்கு இணங்க சம்பள நிலை : ரூபா
   - (உ) அட்டவணை II இற்கு இணங்க சம்பள நிலை : ரூபா
   - (ஊ) அட்டவணை II இற்கு ஏற்ப சம்பள படிமுறை :
   - (எ) இறுதிச் சம்பள உயர்வுத் திகதி :

2. அட்டவணை II இற்கு ஏற்ப 2019.01.01 ஆம் திகதிக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளம்: ரூபா,

3. தவறான ஒரு வகுப்பீட்டின் கீழ் அல்லது கணிப்பீட்டுக் கோளாறின் கீழ் அல்லது வேறு ஏதாவது தவறின் காரணமாக அல்லது கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதெனத் தெரியவருமாயின், அத்தொகைகள் மீள அறவீடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

| தயாரித்தது : | | பரிசீலித்தது : | |
|---|---|---|---|
| கையொப்பம் | :........................ | கையொப்பம் | :........................ |
| பெயர் | :........................ | பெயர் | :........................ |
| பதவி | :........................ | பதவி | :........................ |
| திகதி | :........................ | திகதி | :........................ |

அங்கீகரித்தது :

கையொப்பம் :..................................................
பெயர் :..................................................
பதவி :..................................................
திகதி :..................................................
உத்தியோகபூர்வ முத்திரை :……………...................

பிரதிகள் :- 1……………………………………………
2……………………………………………

இணைப்பு V

சம்பள மீளமைப்பு – மாதிரிக் கடிதம்

எனது இல :
திகதி :

பெயர் :
பதவி:

**<u>முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை ………… இணங்க 2020.01.01 ஆம் திகதிக்கான சம்பள மீளமைப்பு</u>**

மேற்போந்த சுற்றறிக்கைப்படி தங்களின் சம்பளம் 2020.01.01 ஆம் திகதிக்கு பின்வருமாறு மீளமைக்கப்படுகின்றது.

1. முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை …….. வகுதிப்படுத்தலுக்கு அமைய 2019.12.31 ஆம் திகதிக்கு,

   (அ) சேவைத் தொகுதி :

   (ஆ) சம்பள குறியீடு :

   (இ) சம்பள அளவுத்திட்டம் : ரூபா.

   (ஈ) அட்டவணை I இற்கு இணங்க சம்பள நிலை : ரூபா

   (உ) அட்டவணை II இற்கு இணங்க சம்பள நிலை : ரூபா

   (ஊ) அட்டவணை II இற்கு ஏற்ப சம்பள படிமுறை :

   (எ) இறுதிச் சம்பள உயர்வுத் திகதி :

2. அட்டவணை II இற்கு ஏற்ப 2020.01.01 ஆம் திகதிக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளம்: ரூபா,

3. தவறான ஒரு வகுப்பீட்டின் கீழ் அல்லது கணிப்பீட்டுக் கோளாறின் கீழ் அல்லது வேறு ஏதாவது தவறின் காரணமாக அல்லது கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதெனத் தெரியவருமாயின், அத்தொகைகள் மீள அறவீடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

| தயாரித்தது : | | பரிசீலித்தது : | |
|---|---|---|---|
| கையொப்பம் | :......................... | கையொப்பம் | :......................... |
| பெயர் | :......................... | பெயர் | :......................... |
| பதவி | :......................... | பதவி | :......................... |
| திகதி | :......................... | திகதி | :......................... |

அங்கீகரித்தது :

கையொப்பம் :..................................................
பெயர் :..................................................
பதவி :..................................................
திகதி :..................................................
உத்தியோகபூர்வ முத்திரை :……………......................

பிரதிகள் :- 1……………………………………………
2……………………………………………

**அட்டவணை III**

**அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளுக்கான சம்பளத் திட்டம் - 2016**

2006.04.25 ஆம் திகதிய 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மற்றும் அதில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்காக நடைமுறைப்படுத்தப்படும் சம்பள அளவுத் திட்டங்களுக்குப் பதிலாக அந்தச் சுற்றறிக்கையின் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள புதிய சம்பள அளவுத் திட்டங்களை 2016.01.01 ஆம் திகதி முதல் 05 கட்டங்களாக அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் நடைமுறைப் படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

**02. புதிய சம்பள அமைப்பினுள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.**

(i) 2011.12.12 ஆந் திகதிய 31/2011 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2012.12.31 ஆந் திகதிய 18/2012 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இற்கமைய செலுத்தப்படும் ஓய்வூதியத்திற்கு உரித்தற்ற விசேட கொடுப்பனவு

(ii) 2014.11.12 ஆந் திகதிய 24/2014 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2014.12.31 ஆம் திகதிய 24/2014(I) ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2015.02.11 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 05/2015 இற்கமைய மாதாந்தம் கொடுப்பனவு செய்யப்படும் ரூபா 10,000/- இடைக்காலக் கொடுப்பனவு.

**03. சம்பள மீளமைப்பு**

03.1 தற்போதுள்ள சம்பள அளவுத் திட்டங்களில் இருந்து புதிய சம்பள அளவுத் திட்டங்களுக்கு சம்பள மீளமைப்புச் செய்வது படிநிலைக்கு படிநிலை வைத்தல் முறையின் கீழ் மேற்கொள்ளல் வேண்டும். இருப்பினும் இச் சம்பளத் திருத்தம் 05 கட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படுவதால், அட்டவணை II இல் காட்டப்பட்டுள்ள திருத்தம் செய்யப்பட்ட அட்டவணைக்கமைய மீளமைப்புச் செய்தல் வேண்டும்.

03.2 சம்பள மாற்றியமைப்பைத் தயாரிப்பதற்கு வசதியாக அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள சகல சம்பள அளவுத் திட்டங்களுக்கும் வெவ்வேறான மீளமைப்பு அட்டவணைகள் அட்டவணை II இல் காட்டப்பட்டுள்ளது.

03.3 சம்பள மாற்றியமைப்பை மேற்கொள்ளும் போது, 2015.12.31 ஆந் திகதியன்று நிலவும் சம்பள அமைப்பின் கீழ் ஏற்புடையதான சம்பளக் குறியீட்டை முதலில் இனங்காணல் வேண்டும். அதற்கமைய இச்சுற்று நிருபத்தின் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள நேரோத்த சம்பளக் குறியீடு மற்றும் அதற்குரிய அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள மீளமைப்பு அட்டவணையைத் தெரிவு செய்துகொள்ளல் வேண்டும். 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளக் குறியீடுகளுக்கு நேரொத்த இந்த சுற்றறிக்கையின் கீழான புதிய சம்பளக் குறியீடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| அ.நி.சு. 06/2006 இற்கமைய சம்பளக் குறியீடு | புதிய சம்பளக் குறியீடு |
|---|---|
| SF 4 – 2006 | JS 5 - 2016 |
| SF 2 – 2006 | JS 4 - 2016 |
| SF 1 – 2006 | JS 3 - 2016 |

03.4 உரிய மீளமைப்பு அட்டவணைக்கமைய 2015.12.31 ஆந் திகதிக்கு ஏற்புடையதான சம்பளப் படிநிலைக்கு நேரொத்த 2016.01.01 ஆந் திகதிக்குரிய சம்பளப் படிநிலைக்கமைய ஏற்புடைய சம்பளப் படிநிலையில் அமர்த்தல் வேண்டும். இதன் பொருட்டு இச்சுற்று நிருபத்தில் இணைப்பு I ஆகக் காணப்படும் சம்பள மீளமைப்புப் படிவத்தை பயன்படுத்தல் வேண்டும்.

03.5 மேலே 03.4 இல் பின்பற்றிய முறைக்கமைய, 2017.01.01, 2018.01.01, 2019.01.01 மற்றும் 2020.01.01 போன்ற திகதிகளில் எதிர்கால சம்பள மீளமைப்புக்களை மேற்கொள்ளல் வேண்டும். இதற்காக அட்டவணை II இல் ஒவ்வொரு ஆண்டின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளப் படிநிலைகளை ஏற்புடையதாக்கிக்கொள்ளல் வேண்டும். இந்த மீளமைப்புக்காக ஒவ்வொரு ஆண்டிற்கும் இணைப்பு II, III, IV மற்றும் V எனக் காணப்படும் படிவங்களை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

**04. சம்பள ஏற்றத்தைக் கணக்கிடல்.**

04.1 சம்பள அளவுத் திட்டத்தினுள் சம்பள ஏற்றத்தைக் கணக்கிடல்

2016.01.01 ஆம் திகதி முதல் 2016.12.31 ஆம் திகதி வரையிலான காலத்தினுள் சம்பள ஏற்றத்தை உழைத்துக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் மேலே 03.4 இல் அமைக்கப்பட்ட சம்பளப் படி நிலைக்கு அடுத்த உயர்ந்த சம்பளப் படிநிலையில் வைத்தல் வேண்டும். இதற்கமைய 2016 ஆம் ஆண்டிற்குரிய சம்பள ஏற்றத்தின் பெறுமதியாக உரிய சம்பளப் படிநிலைகள் இரண்டிற்கும் இடையில் உள்ள வேறுபாட்டைக் கருதுதல் வேண்டும்.

04.2 சம்பள அளவுத் திட்டத்தின் உச்சளவைத் தாண்டி சம்பள ஏற்றத்தை வழங்குதல்

(அ) சம்பள அளவுத் திட்டமொன்றில் உச்ச நிலையை அடைந்திருக்கும் போது 2016.01.01 ஆம் திகதி முதல் ஏற்புடைய சம்பளப் படிநிலையைத் தீர்மானிப்பதற்காக அட்டவணை II இல் குறிப்பிட்ட சம்பள மாற்றல் அட்டவணையில் உரிய நிரலில் சம்பள அளவுத்திட்டத்தின் இறுதியில் இருக்கும் சம்பளப் படிநிலைகளுக்கிடையிலான வேறுபாட்டை சம்பள ஏற்றமாகக் கருதி சம்பளப் படிநிலையைக் கணக்கிடல் வேண்டும்.

(ஆ) 2016.01.01 ஆம் திகதியின் பின்னர் சம்பள அளவுத்திட்டத்தின் உச்சளவையும் தாண்டி சம்பள ஏற்றத்தை உழைத்துக்கொள்ளும் சந்தர்ப்பத்தின்போதும் மேலே (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் ஏற்புடைய சம்பளப் படி நிலையை கணக்கிடல் வேண்டும்.

**05. மொத்த சம்பளத்தின் சீராக்கல் படி,**

05.1 அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக மேற்காண் 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள படிகளுடன் 2015.12.31 ஆம் திகதியன்று பெற்ற மொத்தச் சம்பளம் மற்றும் இந்தச் சுற்றறிக்கையின் அட்டவணை II இல் குறிப்பிடப் பட்டுள்ள ஒவ்வொரு ஆண்டிற்குமுரிய அடிப்படைச் சம்பளத்திற்குட்கிடையிலான வேறுபாடு மொத்தச் சம்பளத்தின் சீராக்கல் படியாக கணக்கிடப்பட்டு அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, ஒவ்வொரு ஆண்டிற்கும் உரிய அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக அதனுடன் நேரொத்த சீராக்கல் படியையும் செலுத்த வேண்டும். இந்த சீராக்கல் படி இங்கு கீழே 16 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அலுவல் தவிர வேறு எந்தவொரு அலுவலுக்காகவும் சம்பளத்தின் ஒரு பகுதியாகக் கருதுதல் கூடாது.

05.2 மேலே 04.2 இன் பிரகாரம் உச்சளவுக்கு அப்பால் சம்பளப் படிநிலையை கணிப்பீடு செய்யும் சந்தர்ப்பமொன்றின்போது அப் படிநிலைக்குரிய மொத்த சம்பளத்தில் சீராக்கல் படியையும் செலுத்துதல் வேண்டும். இதன் பொருட்டு முதலில் 2015.12.31 ஆந் திகதியன்று அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 அல்லது அதற்குத் திருத்தமாக வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்களின் கீழ் பெற்ற சம்பளப் படிநிலை மற்றும் இச்சுற்றுநிருபத்தின் இரண்டாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சுற்று நிருபங்களின் மூலம் உரித்தான படிகளை மாத்திரம் உள்ளடக்கிய மொத்தச் சம்பளத்தைக் கணித்தல் வேண்டும். இச் சம்பளம் மற்றும் மேற்படி 04.2 இன் கீழ் கணிக்கிடப்பட்ட சம்பளப் படி நிலைக்கும் இடையில் நிதி ரீதியாக அனுகூலமற்றதாயிருப்பின், அப்பெறுமதியினை மொத்தச் சம்பளத்தின் சீராக்கல்படியாக உரிய சம்பளத்துடன் செலுத்துதல் வேண்டும்.

**06. பதவி உயர்வின் போது சம்பளத்தை மீளமைத்தல்**

இந்த கட்ட முறையின் கீழ் சம்பளத்தை மீளமைக்கும் காலத்தினுள் (2016.01.01 முதல் 2020.01.01 வரை) பதவி உயர்வொன்றைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பமொன்றின் போது அந்தப் பதவி உயர்வுக்குரித்தான சம்பள மீளமைப்புக்களின் போது அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள அந்தப் பதவி உயர்வுகள் அமுல்படுத்தப்படும் ஆண்டிற்குரிய நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளப் படிநிலையைகளையே ஏற்புடையதாக்கிக்கொள்ளல் வேண்டும்.

**07. ஏனைய படிகள்**

07.1 இச் சுற்று நிருபத்தில் இரண்டாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளின் ஊடாக வழங்கப்பட்டுள்ள படிகளை உள்ளடக்கிய வகையில் புதிய சம்பள அமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளதால், 2016.01.01 ஆந் திகதி தொடக்கம் இப்படிகளைக் கொடுப்பனவு செய்தல் நிறுத்தப்படல் வேண்டும்.

07.2 2013.12.31 ஆந் திகதிய 37/2013 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மாதாந்தம் செலுத்தப்படும் ரூபா 7,800/- வாழ்க்கைச் செலவுப் படி தொடர்ந்தும் செலுத்தப்படல் வேண்டும்.

## 08. ஓய்வூதியம்

08.1 இச் சுற்றறிக்கையின் ஊடாக வெளியிடப்படும் சம்பள அமைப்பின் பிரகாரம் 2016.01.01 ஆம் திகதியின் பின்னர் இளைப்பாறும் ஓய்வூதியக்காரர்களின் பொருட்டு ஓய்வூதியத்தைக் கணக்கிடும்போது அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவர்கள் இறுதியாகப் பெற்ற சம்பளப் படிநிலையை ஏற்புடையதாக்கிக் கொள்ளல் வேண்டும்.

08.2 அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டங்கள் 2020.01.01 ஆந் திகதி தொடக்கம் முழுமையாகச் செயற்பட ஆரம்பித்ததும் 2016.01.01 ஆந் திகதியின் பின்னர் இளைப்பாறும் ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியத்தையும் அவ்வாறு திருத்தம் செய்யப்படுவதுடன், இது தொடர்பாக அறிவுரைகள் பின்னர் வெளியிடப்படும். 2016.01.01 ஆந் திகதி தொடக்கம் 2019.12.31 வரையிலான காலத்தினுள் ஓய்வூதியம் தொடர்பாக திருத்தங்கள் மேற்கொள்ளப்பட மாட்டாது.

08.3 2015.02.11 ஆந் திகதிய, 05/2015 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்று நிருபத்தின் பிரகாரம் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு செலுத்தப்படும் மாதத்திற்கு ரூபா 3,500 இடைக்காலக் கொடுப்பனவு இச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016.01.01 ஆம் திகதியின் பின்னர் இளைப்பாறுபவர்களுக்கு செலுத்தப்படலாகாது. இருப்பினும் 2013.12.31 ஆந் திகதிய 37/2013 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்று நிருபத்திற்கமைய ஓய்வூதியக்காரர்களின் பொருட்டு செலுத்தப்படும் மாதம் ஒன்றிற்கு ரூபா 3,525 ஆன வாழ்க்கைச் செலவுப் படி செலுத்தப்படல் வேண்டும்.

## 09. சம்பளத்தின் சதவீதமாகச் செலுத்தப்படும் படிகள்

சம்பளத்தின் சதவீதமாகச் செலுத்தப்படும் படியினை 2015.12.31ஆந் திகதியன்று நிலவிய நிதி ரீதியான பெறுமதிக்கு வரையறுத்தல் வேண்டும். 2016.01.01 ஆந் திகதியின் பின்னர் இந்தச் சுற்றறிக்கை ஏற்புடையதாகும் பதவியொன்றுக்கு நியமிக்கப்படும்போது படியை கணக்கிடுவதற்காக அப்பதவிக்கு 2015.12.31 ஆந் திகதியன்று நிலவிய சம்பளத்தை அடிப்படையாகக் கொள்ளல் வேண்டும்.

## 10. நியமனக் கடிதங்களில் சம்பள அளவுத்திட்டத்தைக் குறிப்பிடல்

இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அமைப்பு முழுமையாகச் செயற்படுத்தப்படும் 2020.01.01 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புக்கள் / பதவி உயர்வுகளின் போது வழங்கப்படும் நியமனக் கடிதங்களில் சம்பள அளவுத்திட்டத்தைக் குறிப்பிடும்போது, அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிய சம்பள அளவுத் திட்டத்தை ஏற்புடையதாக்கிக் கொள்ளல் வேண்டும். இருப்பினும் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலுத்துகைகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமாதலால் அது பற்றியும் அந்நியமனக் கடிதங்களில் குறிப்பிடல் வேண்டும்.

## 11. பதவி / சேவை வகைப்படுத்தல்

நீதிமன்ற உத்தியோகத்தர்கள் 2016.02.25 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவி வகைப்படுத் தலுக்கமைய சிரேஷ்ட நிலைக்குச் சமமாவதுடன், பதவி நிலை உத்தியோகத்தர்களாகக் கருதப்படுவர்.

**12. விதவைகள் / தாபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான பங்களிப்புத் தொகை**

விதவைகள் / தாபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான பங்களிப்புப் தொகை அடிப்படைச் சம்பளத்தின் 7% எனும் சதவீதம் தொடர்ந்தும் மாற்றமின்றி செயற்படுத்தப்படல் வேண்டும். அட்டவணை II இன் கீழ் ஒவ்வொரு ஆண்டிற்கும் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைச் சம்பளத்தை ஏற்புடையதாக்கிக் கொள்ளல் வேண்டும்.

**13. சம்பள ஏற்றத் திகதி**

இந்த சம்பள மீளளமைப்புக் காரணத்தால் சம்பள ஏற்றத் திகதியில் மாற்றங்கள் ஏற்படாது.

**14. சம்பள அளவுத் திட்டத்தின் உச்சளவுக்கு அப்பால் சம்பள ஏற்றத்தைச் செலுத்துதல்**

சம்பள அளவுத் திட்டத்தின் உச்சளவை அடைந்துள்ள உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெறும் திகதி வரை அல்லது வேறொரு சம்பள அளவுத்திட்டத்திற்குரிய பதவியொன்றில் நியமிக்கப்படும் / பதவி உயர்வு பெறும்வரை தொடர்ந்தும் சம்பள ஏற்றங்களை வழங்க முடியும்.

**15. இணைந்த படி**

இணைந்த படி ரூபா 500.00 ஆகும்.

**16. கடன் / முற்பணத்தை வழங்கும்போது மாதாந்த மொத்தக் கழிவுகளின் எல்லை**

அரச உத்தியோகத்தரொருவர் கடன் / முற்பணத்தைப் பெற்றுக் கொள்ளும் போது கருத்திற்கொள்ளும் 40% எல்லையைக் கணிக்கிடும்போது அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள அன்றைய தினத்தின் அடிப்படைச் சம்பளம் மற்றும் சீராக்கல் படியை ஏற்புடையதாக்கிக்கொள்ள வேண்டும்.

**17. பொது அறிவுரைகள்**

இச் சுற்றறிக்கைக்கமைய, 2016.01.01 ஆம் திகதியன்று உரித்தான சம்பளத்தை தீர்மானிக்கும் போது 2006.01.01 ஆம் திகதி அல்லது அத்தினத்திற்குப் பின்னர் சம்பளத்தில் மேற்கொண்ட திருத்தங்களுக்கமைய சம்பளத்தை தயாரித்தல் மற்றும் ஏற்புடைய சம்பள மீளமைப்பு சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளதென உரிய அதிகாரிகள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

**18. மேலதிகமாகச் செலுத்தப்படல்**

இந்த அறிவுரைகளை தவறான முறையில் விளங்கிக் கொள்வதன் காரணமாக அல்லது ஆவணங்களின் பிழைகள் காரணமாக அல்லது கணக்கிடும் போது ஏற்படும் தவறுகள் காரணமாக அல்லது வேறேதும் தவறுகள் காரணமாக எவராவதொரு உத்தியோகத்தருக்கு மேலதிகத் தொகையொன்று செலுத்தப்பட்டிருப்பின் அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையை மீளச் செலுத்துவதற்கு அந்த உத்தியோகத்தர் கட்டுப்பட்டுள்ளார்.

**19. தெளிவுபடுத்திக் கொள்ளல் மற்றும் மேலதிக அறிவுரைகள்**

இச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் சம்பந்தமாக விளக்கங்கள் மற்றும் மேலதிக அறிவுரைகள் எதிர்பார்க்கப்படின், அவ்வாறான கோரிக்கைகளை திறைசேரிச் செயலாளர், பொதுத் திறைசேரி, நிதி அமைச்சு, கொழும்பு 01 எனும் முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

* 21.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 22.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

23.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.